(This question paper contains 2 printed pages)

Roll No.

**Sr. No of Question Paper: 334**

**Unique Paper Code: 208361**

**Name of the Paper: Journalistic Writing and Translation**

**Name of the Course: B. A. (Prog.) Tamil Language-A**

**Semester: III**

D

Duration: 3 Hours. Max. Marks: 75

## பகுதி I

1. செய்தி என்றால் என்ன? எந்தெந்த நிகழ்ச்சிகள் செய்தி என்ற வடிவம் பெறும்? 10

(அல்லது)

செய்திக் கதையின் அமைப்பை விவரிக்க.

2. அறிக்கை என்றால் என்ன? சான்று தந்து விளக்குக. 10

(அல்லது)

உங்கள் ஊரில் நடந்த தீபாவளி விழா குறித்து ஓர் அறிக்கை எழுதுக.

3. ஒரு பத்திரிகையில் இடம்பெறும் சிறப்புக் கட்டுரை (Feature Writing) குறித்து விவரிக்க. 10

(அல்லது)

'தேசிய விடுதலை இயக்கம்' குறித்து ஒரு சிறப்புக் கட்டுரை எழுதுக.

4. பத்திக் கட்டுரை (Column Writing) என்றால் என்ன? எந்தெந்த செய்திகள் பத்திக் கட்டுரைகளாக அமையும்? சான்றுகளுடன் விவரிக்க. 10

(அல்லது)

'தில்லிப் பல்கலைக்கழக மாணவர் தேர்தல் ' குறித்து ஒரு பத்திக் கட்டுரை வரைக.

5. தலையங்கத்தின் உருவம் மற்றும் உள்ளடக்கத்தை விளக்கி எழுதுக. 10

(அல்லது)

'முல்லைப் பெரியாறு அணை விவகாரம்' குறித்து ஒரு தலையங்கம் எழுதுக.

## பகுதி II

1. கீழ்வரும் பத்தியைத் தமிழில் மொழிபெயர்க்க: 10

In 1756, March Yusuf Khan was sent to Madurai to collect taxes and restore order. But during that time Madurai was under control of one Barkadthullah of Chanda Sahib days,

P.T.O

with the support of Hyder Ali of Mysore. During this time an old Fakir climbed the top of the Madurai Meenakshi Temple and was preparing to build a dargah for himself, which angered the locals. Barkadthullah justifying the Fakir attempts further added fuel to the fire. During this time Yusuf Khan arrived with little as 400 troops to take control of Madurai, showing his brilliance in defeating Barkadthullah's large army, with Barkadthullah fleeing to Sivaganga Zamin and the Fakir, got whacked out of the town.

2. கீழ்வரும் பத்தியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க: 10

நாவல் என்ற இலக்கிய வகை ஆங்கிலக் கல்வி மூலம் இந்திய மொழிக்குக் கிடைத்த புதிய கொடை. மனித உறவுமுறைகளை எடுத்துக் காட்டும் ஆற்றல் வாய்ந்த படைப்பாக நாவல்கள் திகழ்கின்றன. சமுதாய மாற்றங்கள் பற்றி அறிவதற்கும் சமுதாய மாற்றங்களினால் ஏற்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றி அறிவதற்கும் நாவல்கள் சமகாலச் சான்றுகளாக அமைகின்றன. உலகின் சிக்கல் நிறைந்த வாழ்க்கைப் பிரச்சினைகளை, சமுதாயச் சலனங்களைச் சித்திரிக்கும் இப்பண்பினால்தான் நாவல் என்பது வாழ்க்கையின் எதிரொலி என்ற கருத்து உருவாகியது. நாவல் ஒரு கதை சொல்கிறது என்பதை மீறி, நாவலில் பலவகை மனிதர்களின் அல்லது சமூகத்தின் இயக்கத்தைக் கவனிக்க முடிகிறது. நாவல்கள் மனிதர்களைச் சிக்கலாக்கிப் பார்ப்பதோடு மனித நேயத்தின் வழியே மனிதர்கள் அதில் பார்க்கப்படுகிறார்கள். அந்த வகையில் நாவல் என்பது கலை ரீதியான ஒரு மாபெரும் விவாதம் என்று குறிப்பிடலாம்.

3. கீழ்வரும் வினா–விடைப் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க: 5

ஐயா எங்கிருந்து வருகின்றீர்கள்?

நான் தஞ்சாவூரிலிருந்து வருகின்றேன்.

எந்தத் துறையில் எங்குப் பணியாற்றுகின்றீர்கள்?

சுகாதாரத் துறையில் தில்லியில் பணியாற்றுகின்றேன்.

உங்கள் பணியின் சிறப்பு அம்சம் என்ன?

இந்தியாவிலுள்ள மத்திய அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கான பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்த்து வைப்பதுதான்.